




# சக்கர வியூகம்

SAKKRA VIYUGAM

புலனாய்வு நாளிதழ்

PRGI NO: TNTAM/25/A1018








Website: www.sakkraviyugam.com | PRGI:TNTAM/25/A1018 | Email: sakkraviyugam@gmail.com

VOLUME : 01 | ISSUE: 223 | 05.2.2026 | THURSDAY | THAI : 22 | PRICE : RS.5/-

மலர் : 01 | இதழ் : 223 | 05.2.2026 | வியாழக்கிழமை | தை : 22 | விலை : ரூ.5/–


## மாணவர்களுக்கு கல்விக் கடன் தள்ளுபடி

# “2ம் கட்ட தேர்தல் வாக்குறுதி!”

## எடப்பாடி பழனிச்சாமி அறிவிப்பு



சென்னை: பிப்.5-

“மாணவர்கள், பெற்றோர்கள் நலன் காக்கும் பொருட்டு, வங்கிகளில் பெற்ற கல்விக் கடனை தள்ளுபடி செய்யும் வகையில், அத்தொகையை அரசே ஏற்கும். வாழ்வாதார உதவியாக, அரிசி குடும்ப அட்டைதாரர்களுக்கு, ஆண்டுக்கு 3 கேஸ் சிலிண்டர்கள் விலையில்லாமல் வழங்கப்படும்” என்பன உள்ளிட்ட 5 தேர்தல் வாக்குறுதிகளை அதிமுக பொதுச் செயலாளர் எடப்பாடி பழனிசாமி அறிவித்தார்.

இது தொடர்பாக அதிமுக வெளியிட்டுள்ள அறிக்கையில், ‘‘தமிழ்நாட்டில் 17 ஆவது சட்டமன்றப் பேரவைக்கான பொதுத் தேர்தல் விரைவில் நடைபெற உள்ளதை முன்னிட்டு, தமிழக மக்களின் பேரன்பைப் பெற்று, மக்கள் நலன் ஒன்றை மட்டுமே குறிக்கோளாகக் கொண்டு செயல்பட்டு வரும் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் அளிக்கப்படும் இரண்டாம் கட்டத் தேர்தல் வாக்குறுதிகள்:

முதியோர் உள்ளிட்டவர்களுக்கான ஓய்வூதியங்கள் ரூ. 2,000மாக உயர்வு: சமூக ஓய்வூதியத் திட்டத்தின் கீழ் முதியோர்களுக்கு வழங்கப்படும் ரூ. 1,000 உதவித் தொகை ரூ. 2,000 ஆக உயர்த்தி வழங்கப்படும். மேலும், விதவைப் பெண்கள், முதிர் கன்னிகள், கணவனால் கைவிடப்பட்ட பெண்கள், மாற்றுத் திறனாளிகள் மற்றும் மூன்றாம் பாலினத்தவர்களுக்கு வழங்கப்பட்டு வரும் சமூகப் பாதுகாப்பு ஓய்வூதியம் ரூ. 1,200 ல் இருந்து ரூ. 2,000ஆக உயர்த்தி வழங்கப்படும்.

வங்கிகளில் பெற்ற கல்விக் கடன் தள்ளுபடி: மாணவர்கள், பெற்றோர்கள் நலன் காக்கும் பொருட்டு, வங்கிகளில் பெற்ற கல்விக் கடனை தள்ளுபடி செய்யும் வகையில், அத்தொகையை அரசே ஏற்கும்.

வாழ்வாதார உதவியாக, ஆண்டுக்கு 3 கேஸ் சிலிண்டர்கள் வழங்கப்படும்: வாழ்வாதார உதவியாக, அரிசி குடும்ப அட்டைதாரர்களுக்கு, ஆண்டுக்கு 3 கேஸ் சிலிண்டர்கள் விலையில்லாமல் வழங்கப்படும்.

ஜல்லிக்கட்டில் உயிரிழந்தால் நிவாரணம்: தமிழர்களின் வீர விளையாட்டான ஜல்லிக்கட்டு விளையாட்டின்போது, காளையை அடக்கும் ஜல்லிக்கட்டு வீரர்கள் அசம்பாவிதம் ஏற்பட்டு உயிரிழக்க நேரிட்டால், அவர்களது குடும்பத்தினருக்கு ரூ. 10 லட்சம் வழங்கப்படும். அதேபோல், படுகாயமடைந்தவர்களுக்கு மருத்துவ சிகிச்சைக்காக ரூ. 2 லட்சம் வழங்கப்படும்.

அரசாணை வழங்கப்பட்ட இடங்களில் நடைபெறும் ஜல்லிக்கட்டு போட்டிகளை எழுச்சியோடு நடத்துவதற்கு, அரசின் சார்பில் மானியமாக ரூ. 5 லட்சம் வழங்கப்படும். ஜல்லிக்கட்டு போட்டி நடத்துவதற்காக தற்போது கடைபிடிக்கப்பட்டு வருகின்ற ஆன்லைன் முறை ரத்து செய்யப்படும். ஏற்கெனவே இருந்த பழைய நடைமுறையே மீண்டும் பின்பற்றப்படும்.

சிறுபான்மையினருக்கான அறிவிப்புகள்:

1. இஸ்லாமிய, கிறிஸ்தவ மற்றும் ஏனைய சிறுபான்மை வகுப்பைச் சேர்ந்த மகளிர் சுயதொழில் தொடங்குவதற்கு வட்டியில்லா கடன் வழங்கப்படும்.

2.மாற்றுத் திறனாளிகள் கூட்டுறவு வங்கிகளில் வாங்கிய கடன் தள்ளுபடி செய்யப்படும்'' என தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஏற்கனவே, முதற்கட்டமாக 5 தேர்தல் வாக்குறுதிகள் அறிவிக்கப்பட்ட நிலையில், தற்போது இரண்டாம் கட்டமாக மேலும் 5 தேர்தல் வாக்குறுதிகளை அதிமுக வழங்கியுள்ளது.

முன்னதாக, சென்னை, ராயப்பேட்டையில் உள்ள அதிமுக தலைமையகத்தில் எடப்பாடி பழனிசாமி தலைமையில் மாவட்டச் செயலாளர்கள் ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது.

இக்கூட்டத்தில், நடைபெற உள்ள சட்டப்பேரவைத் தேர்தலையொட்டி, மேற்கொள்ளப்பட்டு வரும் பணிகள் எந்த அளவில் நடைபெற்று வருகின்றன என்பதை மாவட்டச் செயலாளர்களிடம் கேட்டறிந்ததோடு, 2 கட்ட தேர்தல் வாக்குறுதிகளை, கிளை, வார்டு, வட்ட அளவில் பட்டிதொட்டியெங்கும் வாழும் மக்களிடையே கொண்டுசெல்வதோடு, பல்வேறு வகையிலான தொடர் பிரச்சாரங்களை மேற்கொண்டு, மக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்துமாறு விரிவாக ஆலோசனை வழங்கினார்.

## நகை திருட்டு புகாரில் உண்மை இல்லை; இது காவல் மரணமே அஜித்குமார் வழக்கில் சிபிஐ அறிக்கை





மதுரை: பிப்.5-

‘மடப்புரம் பத்ரகாளி அம்மன் கோயில் காவலாளி அஜித்குமார் வழக்கில், நகை திருட்டுப் புகாரில் உண்மை இல்லை. அஜித்குமாரின் மரணம் என்பது காவல் மரணமே என உறுதியாகியுள்ளது’ என்று உயர் நீதிமன்ற மதுரை கிளையில் சிபிஐ அறிக்கை தாக்கல் செய்துள்ளது.

திருப்புவனம் மடப்புரம் பத்ரகாளி அம்மன் கோயில் காவலாளியாக பணிபுரிந்தவர் அஜித்குமார். இவரை கடந்த ஆண்டு ஜூன் 27ம் தேதி நகை காணாமல் போனது தொடர்பாக நிகிதா என்பவர் அளித்த புகாரின் அடிப்படையில் தனிப்படை காவலர்கள் விசாரித்தனர். அதில் கடுமையாக தாக்கப்பட்ட அஜித்குமார் ஜூன் 28ம் தேதி உயிரிழந்தார்.

இந்த கொலை வழக்கில் 5 தனிப்படை காவலர்களான கண்ணன், ராஜா, ஆனந்த், பிரபு, சங்கர மணிகண்டன் ஆகிய 5 பேர் கைது செய்யப்பட்டு மதுரை மத்திய சிறையில் அடைக்கப்பட்டனர்.

இதனிடையே அஜித்குமார் கொலை வழக்கு சிபிஐ விசாரணைக்கு மாற்றப்பட்டது. இந்த வழக்கில் கைது செய்யப்பட்டு சிறையில் உள்ள காவலர்கள் 5 பேர் ஜாமீன் வழங்கக் கோரி மதுரை அமர்வில் மனு தாக்கல் செய்தனர்.

இந்த மனு நீதிபதி எஸ்.ஸ்ரீமதி முன்பாக இன்று விசாரணைக்கு வந்தது. அப்போது, சிபிஐ தரப்பில், 2 பதில் மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டன.

மேலும், சிபிஐ தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட வாதத்தில், “அஜித்குமாரின் மரணம் ஒரு காவல் மரணம் என்பது உறுதியாகியுள்ளது. டிஎஸ்பி, காவல் ஆய்வாளர், தலைமை காவலர், தனிப்படை காவலர்கள் என 10 பேருக்குமே இதில் தொடர்புள்ளது'' எனத் தெரிவிக்கப்பட்டது.

அப்போது, குறிக்கிட்ட நீதிபதி, நகை திருட்டுப் புகார் என்ன ஆனது? என கேள்வி எழுப்பினர்.

அதற்கு பதிலளித்த சிபிஐ தரப்பு வழக்கறிஞர், “அது உண்மை இல்லை என்பதால், புகார் முடிக்கப்பட்டு விட்டது. அது தொடர்பான அறிக்கை தயாராகி வருகிறது. விரைவில் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்படும்'' எனத் தெரிவிக்கப்பட்டது.

தொடர்ந்து நீதிபதி, “ஒன்றுமே இல்லாத வழக்கிற்கு ஒருவரை அடித்து கொலை செய்துவிட்டனர். புகார் அளித்தவர் மீது நடவடிக்கை எடுக்க வேண்டியது தானே?. அவர் தானே எல்லாவற்றிற்கும் காரணம்?. ஒரு நபரை இத்தனை பேர் சேர்ந்து தாக்குவதற்கு என்ன காரணம்? முன் விரோதம் ஏதும் இருந்ததா? என அடுக்கடுக்கான கேள்வி எழுப்பினார்.

முன்விரோதம் எதுவும் இல்லை. டிஎஸ்பி விசாரிக்குமாறு கூறியதால் இவ்வாறு விசாரித்துள்ளனர்.'' என சிபிஐ தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

மனுதாரர் தரப்பில், “இந்த வழக்கில் வாக்குமூலம் அளித்தவர்கள், பிரபு என்ற போலீஸ்காரரைத் தவிர மற்றவர்கள் அடித்ததாகவே கூறியிருக்கின்றனர். அவருக்கு ஜாமீன் வழங்க வேண்டும்'' எனத் தெரிவிக்கப்பட்டது.

அதற்கு நீதிபதி, “வழக்கு முடியும் வரை யாராக இருந்தாலும் சிறையிலேயே இருக்கட்டும். மனம் பதறுகிறது. ஏதுமில்லாத விசயத்துக்கு ஒருவரை இப்படி அடித்திருக்கிறீர்கள். காவல் துறையினருக்கு பாடம் புகட்டுவோம்.'' என குறிப்பிட்டு விசாரணையை பிப்.17க்கு ஒத்திவைத்து உத்தரவிட்டார்.

## “இபிஎஸ் என்ன சிபிஐ அதிகாரியா?” : கரூர் விவகாரத்தில் செங்கோட்டையன் காட்டம்



சென்னை: பிப்.5-

“கரூர் வழக்கில் சிபிஐ விசாரணை நடந்து வருகிறது. விஜய் நேரில் ஆஜராகி இருமுறை விளக்கம் அளித்து இருக்கிறார். இபிஎஸ் என்ன சிபிஐ உயர் அதிகாரியா?'' என தவெக நிர்வாகி செங்கோட்டையன் விமர்சித்துள்ளார்.

கரூர் சம்பவத்தில் இபிஎஸ் மட்டும் குரல் கொடுக்காமல் இருந்திருந்தால் அந்தக் கட்சியே காணாமல் போயிருக்கும் என்று எஸ்.பி.வேலுமணி கூறியது குறித்த கேள்விக்கு பதில் அளித்த செங்கோட்டையன், “எடப்பாடி பழனிசாமி என்ன சிபிஐ அதிகாரியா? கரூர் வழக்கில் சிபிஐ விசாரணை நடந்து வருகிறது. விஜய் நேரில் ஆஜராகி இருமுறை விளக்கம் அளித்து இருக்கிறார். இவர் சொல்வதனால் விசாரணை நின்றுவிடுமா?

கொடிப் பறக்குது. பிள்ளையார் சுழி போட்டுவிட்டார்கள். பெரிய கட்சி கூட்டணிக்கு வருகிறது என்றெல்லாம் யார் பேசினார்கள்? கூட்டணிக்கு வந்தால் மகிழ்ச்சி. கூட்டணிக்கு வரவில்லை என்றவுடன் இப்போ இப்படி பேசுகிறார்கள்.

தலைவராக யார் இருக்க வேண்டும் என்பதை மக்கள் தான் முடிவு செய்வார்கள். உங்கள் வீட்டு பெண்கள் என்ன சொல்லுகிறார்கள்? தவெகவுக்கு ஓட்டு போடும் என சொல்கிறார்களா, இல்லையா?

நாங்கள் பட்ஜெட் குறித்து இப்போது ஏதுவும் சொல்ல முடியாது. நாங்கள் வளர்ந்து வருகின்ற ஒரு கட்சி. ஆட்சிக்கு வந்த பிறகு பட்ஜெட் குறித்து சொல்வோம்'' என்று அவர் கூறினார்.

## தமிழக வரலாற்றில் வேறு எந்த முதல்வரும் செய்யாத அளவிற்கு தமிழக முதல்வர் தூய்மை பணியாளர்களுக்கு 2 முறை ஊதிய உயர்வு : அமைச்சர் ஐ.பெரியசாமி



சின்னாளபட்டி, பிப்.5

தமிழக வரலாற்றிலேயே ஊரக வளர்;ச்சித்துறை தூய்மை காவலர்களுக்கு இரண்டு முறை ஊதிய உயர்வு வழங்கிய தமிழக முதல்வருக்கும், ஊரக வளர்ச்சித்துறை அமைச்சருக்கும் நன்றி தெரிவிக்கும் விதமாக மாநிலமாநில பொதுச் செயலாளர் பி.கிருஷ்ணசாமி தலைமையில் மாலை அணிவித்து பாராட்டு தெரிவித்தனர். தமிழகத்தில் 12,525 கிராம ஊராட்சிகள் உள்ளன. இந்த கிராமங்களில் பணிபுரியும் தூய்மை பணியாளர்கள் மற்றும் தூய்மை காவலர்களுக்கு கடந்த அதிமுக ஆட்சியில் 10 வருடங்களாக ஊதிய உயர்வு வழங்கவில்லை. தமிழ்நாடு ஊரக வளர்ச்சித் தொழிலாளர் சங்கம் சார்பாக இந்திய கம்யூனிஸ்ட் மாநில பொருளாளர் எம்.ஆறுமுகம் தலைமையில் ஏ.ஐ.டியு.சி மாநில பொதுச் செயலாளர் எம்.இராதாகிருஷ்ணன், சி.பி.ஐ. திண்டுக்கல் மாவட்ட செயலாளர் ஏ.பி.மணிகண்டன். தமிழக ஊரக வளர்ச்சித்துறை தொழிலாளர் சங்க மாநில தலைவர் எம்.இராமாநிதி, மாநில பொதுச்செயலாளர் பி.கிருஷ்ணசாமி தலைமையில் தமிழக முதல்வர் மற்றும் ஊரக வளர்ச்சித்துறை அமைச்சர் ஐ.பெரியசாமி அவர்களிடம் கோரிக்கை விடுத்தனர். தாயுள்ளத்தோடு தமிழக முதல்வர் கோரிக்கையை ஏற்று தூய்மை பணியாளர்களுக்கு 2023ம் வருடம் 1,400 ரூபாய் கூடுதலாக ஊதிய உயர்வு அளித்தனர்.

அதன் பின்னர் நிர்வாகிகள் விடுத்த கோரிக்கையை அடுத்து நேற்று கூடுதலாக ரூ. 1,000 ஊதிய உயர்வு அளிப்பதாக தமிழக அரசு அறிவித்தது. தற்போது ஊராட்சிகளில் தூய்மை பணியாளர்கள் மாதம் ரூ. 6 ஆயிரம் சம்பளம் வாங்கும் நிலை ஏற்பட்டுள்ளது. தங்களுக்கு இரண்டு முறை ஊதிய உயர்வு அளித்த தமிழக அரசுக்கு நன்றி தெரிவிக்கும் விதமாகவும், இரண்டு முறை ஊதிய உயர்வு அளிக்க காரணமாக இருந்த ஊரக வளர்ச்சித்துறை அமைச்சர் ஐ.பெரியசாமி அவர்களுக்கும், நன்றி தெரிவிக்கும் விதமாக தமிழ்நாடு ஊரக வளர்ச்சித்துறை தொழிலாளர்கள் சங்க பொதுச்செயலாளர் பெ.கிருஷ்ணசாமி மற்றும் திண்டுக்கல் மாவட்ட நிர்வாகிகள் மணிகண்டன் அன்னக்கொடி, போஸ், செல்வக்கொடி, தோழர் ஈடித், நாகஜோதி தலைமையில் சுமார் 600 தூய்மை பணியாளர்கள் சீருடை அணிந்து வந்து அமைச்சருக்கு பிரமாண்டமான மாலை மற்றும் சால்வை அணிவித்து நன்றி தெரிவித்தனர். தூய்மை பணியாளர்கள் மத்தியில் பேசிய அமைச்சர் ஐ.பெரியசாமி அவர்கள் ஊரக வளர்ச்சித்துறையில் பணிபுரியும் அனைத்து ஊழியர்களுக்கும் ஊதிய உயர்வு வழங்க வேண்டும் என்பது என்னுடைய கோரிக்கையாக உள்ளது. கருணை உள்ளத்தோடு தமிழக முதல்வர் அவர்கள் முதல் கட்டமாக தூய்மை பணியாளர்களுக்கு ஊதிய உயர்வு அளித்துள்ளார். தொடர்ந்து மேல்நிலைத் தொட்டி ஆப்ரேட்டர்கள், சுகாதார ஊக்குநர்கள், வட்டார மாவட்ட ஒருங்கிணைப்பாளர்கள், சமூகத் தணிக்கையாளர்களுக்கும், ஊதிய உயர்வு வழங்க முதல்வரிடம் கோரிக்கை விடுத்துள்ளேன். விரைவில் அவர்களுக்கு இனிப்பான செய்தி வரும். கொரோனா காலத்தில் பணி புரிந்ததற்காக ஊக்க தொகை வழங்கவும், நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது என்றார்.



# தென் தமிழகம், டெல்டா மாவட்டங்களில் இன்று லேசாக மழை பெய்ய வாய்ப்பு

சென்னை, பிப்.5-

வளிமண்டல கீழடுக்கு சுழற்சி காரணமாக தென் தமிழகம் மற்றும் டெல்டா மாவட்டங்களில் இன்று ஓரிரு இடங்களில் மழை பெய்யக் கூடும்.

இதுதொடர்பாக சென்னை மண்டல வானிலை ஆய்வு மையம் நேற்று வெளியிட்ட செய்திக்குறிப்பு: லட்சத்தீவு மற்றும் அதையொட்டிய தென்கிழக்கு அரபிக்கடல் பகுதிகளின் மேல் ஒரு வளிமண்டல கீழடுக்கு சுழற்சி நிலவுகிறது.

இதனால், தென் தமிழகம் மற்றும் டெல்டா மாவட்டங்களில் ஓரிரு இடங்களில் இன்று லேசான மழை பெய்யக்கூடும்.

இதர பகுதிகளில் வறண்ட வானிலை நிலவக்கூடும். நீலகிரி, சேலம், கிருஷ்ணகிரி, தருமபுரி, திருப்பத்தூர், வேலூர் மற்றும் ராணிப்பேட்டை மாவட்டங்களில் ஓரிரு இடங்களில் அதிகாலை நேரத்தில் மிதமான பனிமூட்டம் காணப்படும்.

தென் தமிழகம் மற்றும் டெல்டா மாவட்டங்களில் ஓரிரு இடங்களில் லேசான மழை பெய்யக்கூடும். வரும் 6ம் தேதி முதல் 9ம் தேதி வரை வறண்ட வானிலை நிலவக்கூடும்.

# பள்ளியில் மாணவனிடம் கஞ்சா பறிமுதல் சென்னையில் பெற்றோர், பொதுமக்கள் அதிர்ச்சி

சென்னை, பிப்.5-

அரசு பள்ளி மாணவனிடமிருந்து கஞ்சா பொட்டலம் பறிமுதல் செய்யப்பட்ட சம்பவம் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. சென்னை எம்கேபி நகரில் உள்ள அரசு மேல்நிலைப் பள்ளியில் சுற்றுப்புறப் பகுதிகளையும் சேர்ந்த ஏராளமான மாணவ, மாணவிகள் பயின்று வருகின்றனர்.




இந்த பள்ளியில் பயிலும் ஒரு சில மாணவர்களின் நடவடிக்கைகள் ஆசிரியர்களுக்கு சந்தேகத்தை ஏற்படுத்தியது. குறிப்பாக வியாசர்பாடியைச் சேர்ந்த 11ம் வகுப்பு மாணவன் மீது சந்தேகம் எழுந்தது.

இந்நிலையில், நேற்று முன்தினம் காலை 9.45 மணியளவில் வழக்கம் போல் அந்த மாணவன் பள்ளிக்கு வந்தான். சந்தேகம் அடைந்த ஆசிரியர்கள் சம்பந்தப்பட்ட மாணவன் மற்றும் அவரது உடமைகளை சோதனை செய்தபோது ஒரு சிறிய பாக்கெட் (5 கிராம்) கஞ்சாவை இடுப்பில் மறைத்து வைத்திருந்தது தெரிந்தது. இதையடுத்து அதை கைப்பற்றிய ஆசிரியர்கள் பள்ளி தலைமை ஆசிரியரிடம் ஒப்படைத்தனர்.

தலைமை ஆசிரியர் இது தொடர்பாக எம்கேபி நகர் போலீஸாருக்கு தகவல் தெரிவித்தார். போலீஸார் சம்பவ இடம் விரைந்து கஞ்சாவை பறிமுதல் செய்தனர்.

தொடர்ந்து விசாரணை நடைபெற்று வருகிறது. பள்ளிக்கு வந்த மாணவனிடமிருந்து கஞ்சா பறிமுதல் செய்யப்பட்ட சம்பவம் பெற்றோர், பொதுமக்களிடம் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தி உள்ளது.

இது ஒருபுறம் இருக்க, பள்ளிக்கு வரும்போது வழியில் கஞ்சா பொட்டலம் கீழே கிடந்ததாக மாணவன் போலீஸாரிடம் தெரிவித்துள்ளார். இதன் உண்மைத் தன்மை குறித்து போலீஸார் தொடர்ந்து விசாரித்து வருகின்றனர்.

# “அமெரிக்காவின் வரி குறைப்பு பிரதமர் மோடியின் ராஜதந்திர வெற்றி” ஜி.கே.வாசன் பாராட்டு

சென்னை, பிப்.5-

இறக்குமதி வரியைக் குறைப்பதாக அமெரிக்கா அறிவித்திருப்பது, பிரதமர் மோடியின் ராஜதந்திர நடவடிக்கைக்கு கிடைத்த வெற்றி என்று தமாகா தலைவர் ஜி.கே.வாசன் பாராட்டியுள்ளார்.



இதுதொடர்பாக அவர் வெளியிட்டுள்ள அறிக்கை: இந்தியாவிலிருந்து இறக்குமதி செய்யப்படும் பொருட்கள் மீதான வரியை 25 சதவீதத்தில் இருந்து 18 சதவீதமாக குறைப்பதாக அமெரிக்க அரசு அறிவித்திருக்கிறது.

இது பிரதமர் மோடியின் ராஜதந்திரத்தாலும், மத்திய வெளியுறவுத் துறை மற்றும் வர்த்தகத் துறையின் தொடர் முயற்சியாலும் கிடைத்திருக்கும் வெற்றி.

இதற்காக பிரதமர், அமைச்சர்கள், அதிகாரிகளை பாராட்டுகிறோம். திமுக அளித்த வாக்குறுதிகள் முழுமையாக நிறைவேற்றப்படவில்லை. கந்தர்வக்கோட்டை அருகே துவார் கிராமத்தில் சூரியஒளி மின் உற்பத்திக்காக விளை நிலங்களில் மின் கம்பங்களை நடுவதால் விவசாயிகளின் வாழ்வாதாரம் பாதிக்கப்படும். எனவே, இதை தவிர்க்க வேண்டும்.

சம்பா சாகுபடி நெற்பயிர்கள் விரைந்து கொள்முதல் செய்ய வேண்டும். வறட்சி மாவட்டங்களில் ஆறுகளைத் தூர்வாரி, தடுப்பணை அமைக்க வேண்டும். நெல் குறைந்தபட்ச ஆதார விலையை குவிண்டாலுக்கு ரூ.3,500 ஆக உயர்த்தி தர வேண்டும். இவ்வாறு அறிக்கையில் கூறியுள்ளார்.

# எண்ணெய் கொள்முதலை இந்தியா நிறுத்தவில்லை: ரஷ்யா விளக்கம்

ரஷ்ய, பிப்.5-

ரஷ்ய செய்தித் தொடர்பாளர் டிமிட்ரி பெஸ்கோவ் மாஸ்கோவில் செய்தியாளர்களிடம் கூறும்போது, “ரஷ்யாவிடமிருந்து கச்சா எண்ணெய் கொள்முதலை நிறுத்துவது தொடர்பாக இந்திய அரசிடமிருந்து எங்களுக்கு எந்த தகவலும் வரவில்லை. இந்தியாவுடனான உறவை அனைத்து நிலைகளிலும் தொடர்ந்து மேம்படுத்தவே ரஷ்யா விரும்புகிறது" என்றார்.



ரஷ்ய எரிசக்தி அமைச்சக வட்டாரங்கள் கூறுகையில், "இந்திய எண்ணெய் சுத்திகரிப்பு நிறுவனங்களிடமிருந்து ஒப்பந்தங்களை ரத்து செய்வது தொடர்பான எந்தவொரு அறிவிப்பும் இதுவரை வெளியாகவில்லை" என்று தெரிவித்தன.

# அரசு என்பது 24 மணி நேரமும் மக்களுக்காக செயல்படணும்; முதல்வர் ஸ்டாலின் விருப்பம்

விழுப்புரம்: பிப்.5-

என்னை பொறுத்தவரையில் அரசு என்பது 24 மணி நேரமும் மக்களுக்காக செயல்பட வேண்டும். மக்களுக்கு தேவையற்ற அலைச்சல் இருக்க கூடாது என முதல்வர் ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.



திண்டிவனத்தில், ஒவ்வொருவரின் கனவுகளை சேகரிக்கும் விதமாக 'என் கனவு என் எதிர்காலம்' என்ற இணையதளத்தை முதல்வர் ஸ்டாலின் துவக்கி வைத்தார். அவர் பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகளை வழங்கினார்.

பின்னர் முதல்வர் ஸ்டாலின் பேசியதாவது: உங்களுடன் ஸ்டாலின் திட்டத்தை முடக்க சிலர் சுப்ரீம்கோர்ட் வரை சென்றார்கள். அவர்களுக்கு நீதிமன்றம் அபராதம் விதித்தது. பல தடைகளையும் தாண்டி இந்த திட்டம் இன்று வெற்றி பெற்றுள்ளது.

பொதுமக்களின் மனுக்களுக்கு தீர்வு காண்பதில் சிக்கல்கள் இருந்தாலும் 40 நாட்களில் தீர்வு காணப்பட்டது. தமிழகத்தில் உள்ள ஒவ்வொருவரின் தேவைகளையும் நிறைவேற்ற வேண்டும். சட்டங்களையும், திட்டங்களையும் நிறைவேற்றுவது மட்டுமல்ல. தமிழக மக்கள் ஒவ்வொருவரின் தேவையையும் நிறைவேற்ற வேண்டும் என்பது தான் திராவிட மாடலின் நோக்கம்.

தமிழகத்தில் ஒவ்வொருவரின் குறைகள், தேவைகளை கேட்டு நிறைவேற்றி வருகிறோம். 'என் கனவு என் எதிர்காலம்' என்ற இணையதளத்தை தொடங்கி வைத்துள்ளேன். அதில் உங்கள் கனவுகளை பதிவு செய்ய கேட்டுக்கொள்கிறேன்.

அரசு சேவைகள் மக்களுக்கு தடையில்லாமல் விரைவாக கிடைக்க வேண்டும் என்ற அடிப்படையில் தான் உங்களுடன் ஸ்டாலின் திட்டத்தின் மூலம் பெறப்பட்ட மனுக்களுக்கு 3040 நாட்களுக்குள் தீர்வு காணப்பட்டது. என்னை பொறுத்தவரையில் அரசு என்பது 24 மணி நேரமும் மக்களுக்காக செயல்பட வேண்டும். மக்களுக்கு தேவையற்ற அலைச்சல் இருக்க கூடாது.

நிர்வாகம் எளிமையாகவும், நிறைவாகவும், வெளிப்படைத் தன்மையாகவும் செயல்பட வேண்டும். இதனை மனதில் வைத்து தான் மக்களான உங்களுக்கு எந்தெந்த சேவைகள் எல்லாம் அதிகமாக தேவையோ, அதை எல்லாம் நீங்கள் வசிக்கும் இடத்திலேயே வழங்க முடிவு செய்தேன். இவ்வாறு முதல்வர் ஸ்டாலின் பேசினார்.

# கார் கண்ணாடிகளை உடைத்த ரஷ்ய சுற்றுலாப் பயணி: மதுரை போலீஸார் தீவிர விசாரணை

மதுரை, பிப்,5-

மதுரை அண்ணா பேருந்து நிலையம் அருகே சாலையில் அரைகுறை ஆடையுடன் ஒருவர் கையில் கத்தி, கற்களுடன் சுற்றித்திரிந்தார். அவர் திடீரென சாலையோரத்தில் நிறுத்தி இருந்த கார்கள் மீது கற்களை வீசி கண்ணாடிகளை உடைத்தார்.



வெளிநாட்டுக்காரர் தோற்றத்தில் இருந்த அவரது செயலைத் தடுக்க அப்பகுதியினர் முற்பட்டனர். ஆனால், தான் வைத்திருந்த கத்தியைக் காட்டி மிரட்டியதால் பொதுமக்கள் அலறியடித்து ஓடினர்.

இதுகுறித்து தகவலறிந்த அண்ணா நகர் போலீஸார் அங்கு சென்று, அவரைப் பிடிக்க முயன்றனர். அப்போது, அரைகுறை ஆடையுடன் சுற்றிய அந்நபர் போலீஸாரிடமும் கத்தியைக் காட்டி மிரட்டினார். ஒரு வழியாக அவரை சுற்றி வளைத்துப் பிடித்த போலீஸார், அவரிடம் இருந்த கத்தியை பறித்தனர்.

பின்னர் அவர் மதுரை அரசு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார். அவர் வைத்திருந்த பையில் சோதனையிட்டபோது, அவரது பாஸ்போர்ட் சிக்கியது.

அவர் ரஷ்ய நாட்டைச் சேர்ந்த ரிச்சர்ட் (51) என்பதும், சுற்றுலா விசாவில் மதுரை வந்திருப்பதும் தெரியவந்தது. மது போதையில் அவ்வாறு செய்தாரா அல்லது மனநிலை பாதிக்கப்பட்டவரா என்பது குறித்து அண்ணா நகர் போலீஸார் விசாரிக்கின்றனர்.

# உண்டியல் காணிக்கை எண்ணும்போது ராமநாத சுவாமி கோயிலில் பணம் திருடிய பெண் கைது

ராமேசுவரம், பிப்,5-

ராமேசுவரம் ராமநாத சுவாமி கோயிலில் உண்டியல் காணிக்கை எண்ணும் பணி நேற்று முன்தினம் நடைபெற்றது. திருச்சி மாவட்டம் துறையூரைச் சேர்ந்த பிரபாவதி (40) உண்டியல் காணிக்கை எண்ணும் பணியில் தன்னார்வலராகப் பங்கேற்றார்.



அவரது நடவடிக்கையில் சந்தேகமடைந்த கோயில் ஊழியர்கள், அவரை கோயில் அலுவலகத்துக்கு அழைத்துச் சென்று சோதனை செய்தனர். அப்போது, பிரபாவதி ரூ.1 லட்சத்தை திருடியது தெரியவந்தது.

இதுகுறித்து கோயில் இணை ஆணையர் செல்லதுரை ராமேசுவரம் காவல் நிலையத்தில் அளித்த புகாரின் பேரில், பிரபாவதி கைது செய்யப்பட்டார்.



# சென்னை மெட்ரோ ரயில் நிறுவனத்தின் வருவாய் கடந்தாண்டு அதிகரிப்பு

சென்னை ,பிப்.5-

சென்னை மெட்ரோ ரயில் நிறுவனத்தின் வருவாய் 2024–25ம் நிதியாண்டில், கட்டணம் தவிர்த்து இதர பிரிவுகளில் 30 சதவீதம் வரை அதிகரித்துள்ளது. சென்னையில் 2 வழித்தடங்களில் மெட்ரோ ரயில்கள் இயக்கப்படுகின்றன.

3 லட்சத்துக்கும் மேற்பட்டோர் தினமும் பயணம் செய்கின்றனர். மெட்ரோ ரயில் நிறுவனம் டிக்கெட் கட்டண வருவாய் மட்டுமின்றி, இதர வழிகளிலும் வருவாயை திரட்டும் பணிகளை கடந்த சில ஆண்டுகளாக மேற்கொண்டு வருகிறது.

குறிப்பாக, வாகன நிறுத்தும் இடம் அதிகரிப்பு, மெட்ரோவுக்கு சொந்தமான இடங்களை தனியாருக்கு நீண்ட காலத்துக்கு குத்தகை விடுவது, ரயில்கள், ரயில் நிலையங்களில் தனியார் விளம்பரம் செய்ய அனுமதிப்பது உட்பட பல்வேறு வகைகளில் வருவாயை ஈட்டுகிறது.

இதனால் அந்நிறுவனத்தின் வருவாய் கணிசமாக அதிகரித்து வருகிறது. இதற்கிடையே, சென்னை மெட்ரோ ரயில் நிறுவனம் 202425ம் நிதியாண்டின் அறிக்கையை வெளியிட்டுள்ளது. அதன்படி சென்னை மெட்ரோ ரயில் நிறுவனத்தின் மொத்த வருவாய் ரூ.369.49 கோடியிலிருந்து ரூ.425.64 கோடி ஆக உயர்ந்துள்ளது.

இது 15 சதவீதம் அதிகமாகும். பயணக் கட்டண வருவாய் மட்டுமின்றி, இதர பிரிவுகளில் வருவாய் அதிகரித்துள்ளது. இதர பிரிவு வருவாய் ரூ.104.30 கோடியிலிருந்து ரூ.135.39 கோடியாக அதிகரித்துள்ளது. இது 30 சதவீதம் அதிகமாகும்.

வரும் ஆண்டுகளில் பயணிகள் எண்ணிக்கையும், இதர பிரிவுகளில் பயன்பாடுகளும் அதிகரிக்கும் என்பதால், வருவாய் மேலும் அதிகரிக்கும் என்று சென்னை மெட்ரோ ரயில் நிறுவன அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

# மதுரையில் சவால்களை சமாளித்து ஓராண்டை நிறைவு செய்த மாநகாரட்சி ஆணையர் சித்ரா!

மதுரை, பிப்.5-

3 ஆண்டுகளில் 5 ஆணையர்கள் மாற்றப்பட்ட நிலையில் மதுரை மாநகராட்சியின் முதல் பெண் ஆணையராக பொறுப்பேற்ற சித்ரா, நேற்றுடன் ஓராண்டு நிறைவு செய்துள்ள நிலையில் பல்வேறு துறைகளின் செயல்பாட்டை மேம்படுத்தியுள்ளார்.



மதுரை மாநகராட்சியில் ஆளுங்கட்சியினர், அமைச்சர்கள் தலையீடு, மேயர் மாற்றம், சொத்துவரி முறைகேடு என பல சிக்கல்கள் தொடர்கின்றன. இதனால், கடந்த 2021ம் ஆண்டு முதல் 2025 வரை, 5 ஆணையர்கள் இடமாற்றம் செய்யப்பட்டனர்.

மேயர் இந்திராணி பொறுப் பேற்கும் முன்னர், கார்த்திகேயன் ஆணையராக இருந்தார். அவர் 2021ம் ஆண்டு, ஜூன் 14ல் பொறுப்பேற்று 2022 மே 31ல் மாற்றப்பட்டார். சிம்ரன்ஜீத் சிங் காலோன், 2022ம் ஆண்டு ஜூன் 1 முதல் 2023 ஜூன் 6வரை பணியாற்றினார்.

பின்னர் தற்போது மதுரை ஆட்சியராக இருக்கும் பிரவீன்குமார், ஆணையராக 2023ம் ஆண்டு ஜூன் 9ல் பொறுப்பேற்று, 4 மாதங்களில் அக்.18ல் மாற்றப்பட்டார். மதுபாலன், 2023ம் ஆண்டு டிசம்பர் 19ல் பொறுப்பேற்ற நிலையில், 2024 பிப்.11ல் மாற்றப்பட்டார்.

தினேஷ்குமார், 2024 பிப். 12ல் பொறுப்பேற்று, ஓர் ஆண்டை நிறைவு செய்வதற்குள், 2025 பிப். 2ம் தேதி கிருஷ்ணகிரி ஆட்சியராக பதவி உயர்வில் சென்றார். உள்ளூர் அமைச்சர்கள், மேயர், கவுன்சிலர்கள் அரசியல் நெருக்கடியையும், எதிர்பார்ப்புகளையும் பூர்த்தி செய்ய முடியாமலேயே ஆணையராக வந்தவர்கள், அவர்களே இடமாறுதல் கேட்டுச் சென்றனர்.

சிலர் ஆளுங்கட்சியினரால் கட்டாயப்படுத்தி இடமாற்றம் செய்யப்பட்டனர். இதனால் மதுரை மாநகராட்சிக்கு ஆணையராக வருவதற்கே ஐஏஎஸ் அதிகாரிகள் மத்தியில் தயக்கம் இருந்தது. இந்நிலையில் மதுரை மாநகராட்சியின் முதல் பெண் ஆணையராக சித்ரா, கடந்த 2025ம் ஆண்டு பிப்.3ம் தேதி பொறுப்பேற்றார்.

சில மாதங்களில் மாநகராட்சி சொத்துவரி முறைகேடு விவகாரம் சூடுபிடித்து இதுவரை ஆணையர்களாக இருந்தவர்களுக்கு இல்லாத அரசியல் நெருக்கடி சித்ராவுக்கு ஏற்பட்டது. ஆனால், எந்த அரசியல் நெருக்கடிக்கும், சிபாரிசுகளுக்கும் இடம் கொடுக்காமல் இந்த முறைகேடு விவகாரத்தை மிக நேர்மையாக விசாரித்து, உள்ளூர் அமைச்சர்கள் முதல் தமிழக அரசின் பாராட்டை பெற்றார்.

உதவி ஆணையர் உட்பட மாநகராட்சி அலுவலர்கள் 28 பேரை அதிரடியாக சஸ்பெண்ட் செய்ததோடு, சொத்துவரி முறைகேடுக்கு அடித்தளமான கட்டிட அனுமதி, வரிவசூலில் துணிச்சலாக பல்வேறு சீர்திருத்த நடவடிக்கைகளை மேற்கொண்டார். துப்புரவு பணியாளர்கள் போராட்டத்தை சரியாக கையாண்டு தீர்வு கண்டார்.

சொத்துவரி முறைகேடு விவகாரத்தில் திமுக தலைமை மேயர் இந்திராணி முதல் ஐந்து மண்டலத் தலைவர்கள், 2 நிலைக்குழு உறுப்பினர்கள் பதவிகளை பறித்தது. அதன்பின்னர் கடந்த 4 மாதங்களாக மேயர், மண்டலத் தலைவர்கள் இல்லாமலேயே மாநகராட்சி நிர்வாகத்தை ஆணையர் சிறப்பாக மேற்கொண்டு வருவதை அறிந்து, இவரது தலைமையிலேயே மாநகராட்சி நிர்வாகத்தை நடத்துவதற்கு அரசு முடிவு செய்துள்ளதாக கூறப்படுகிறது.

மேயர் இல்லாததால், ஆளுங்கட்சி, கூட்டணிக் கட்சிகள் மற்றும் எதிர்க்கட்சி கவுன்சிலர்களின் அரசியல் அழுத்தங்களை சமாளித்து, ஆணையர் சித்ரா, மாநகராட்சி பள்ளிகள், வருவாய், நிர்வாகம், சுகாதாரம், நகரமைப்பு துறைகளில் பல்வேறு சீர்திருத்த நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது, பொதுமக்களிடம் வரவேற்பை பெற்றுள்ளது.




## ஐஐடி பாம்பே நிறுவனத்துடன் காந்திகிராமம் பல்கலைக்கழகம் ஒப்பந்தம் கையெழுத்தானது

சின்னாளபட்டி, பிப் 05- திண்டுக்கல் மாவட்டம் காந்திகிராமம் நிகர்நிலை பல்கலைக்கழகத்தின் புவிசார் தகவல் தொழில் நுட்ப மையத்தின் சார்பாக புவியியல் தகவல் அறிவு கூட்டாளர் அங்கீகார ஒப்பந்த நிகழ்வு பல்கலைக்கழக வெள்ளிவிழா அரங்கில் நடைபெற்றது. விழாவிற்கு பல்கலை துணை வேந்தர் ந.பஞ்சநாதன் தலைமை தாங்கினார். இணை பேராசிரியர் முத்துக்குமார் வரவேற்று பேசினார். சிறப்பு அழைப்பாளராக தேசிய ஒருங்கிணைப்பாளரும், இந்திய தொழில்நுட்பக் கழகம், பாம்பே மும்பை ஆகியவற்றின் மூத்த ஆராய்ச்சி விஞ்ஞானியுமான முகமது காசிம் கான் அவர்கள் கலந்து கொண்டார். விழாவில் பேசிய பல்கலை துணை வேந்தர் ந.பஞ்சநாதன் திறந்த மூல புவியியல் தகவல் அறிவின் முக்கியத்துவம் மற்றும் அதன் கல்வி ஆராய்ச்சி பயன்பாடுகளை விளக்கினார். பல்கலைக்கழகத்தில் புவிசார் தொழில்நுட்ப வளர்ச்சிக்கான எதிர்கால நோக்கங்களை எடுத்துரைத்தார். சிறப்பு விருந்தனராக கலந்து கொண்ட விஞ்ஞானி முகமது காசிம்கான் பேசும்போது திறந்த மூல புஜஜஷ முயற்சிகள் மற்றும் அவற்றின் தேசிய அளவிலான பங்களிப்புகளை விளக்கியும், அதன் வளர்ச்சி குறித்தும் தெளிவாக எடுத்துரைத்தார். விழாவில், செயல்பாடுகளில் சிறந்து விளங்கியதற்காக காந்திகிராம பல்கலைக்கழகத்திற்கு 'வளர்ந்து வரும் பல்கலைக்கழக விருது' வழங்கப்பட்டது. ஐஐடி பம்பாய் சார்பாக வழங்கப்பட்ட இந்த மதிப்புமிக்க விருதினை, பல்கலைக்கழக துணைவேந்தர் முனைவர் ந.பஞ்சநாதம் அவர்கள் பெற்றுக்கொண்டார். தேசிய புவிசார் விருதுகள் 2024 காந்திகிராம கிராமிய நிறுவனம் கிராமிய மேம்பாட்டுக்கான திறந்த மூல புவியியல் அறிவு கூட்டாளர் விருதை பெற்றுள்ளது. ஐ.ஐ.டி. பாம்பே குழு மற்றும் கூட்டாளர் நிறுவனங்கள் வழங்கிய இந்த அங்கீகாரம், திறந்த மூல புவியியல் கல்வி, ஆராய்ச்சி மற்றும் கிராமிய வளர்ச்சியில் பல்கலைக்கழகம் செய்துள்ள பங்களிப்புகளை பாராட்டி வழங்கப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது.

பல்கலைக்கழகத்தின் பொறுப்பு பதிவாளர் முனைவர் எம். சுந்தரமாரி மற்றும் இயற்பியல் துறையின் மூத்த பேராசிரியர் முனைவர் ஜி. முரளிதரன் நிகழ்ச்சியில் பங்கேற்று வாழ்த்துரை வழங்கினார்கள். நிறைவாக வாழ்நாள் கல்வி மற்றும் விரிவாக்கத் துறை, காந்திகிராம கிராமிய நிகழ்நிலைப் பல்கலைக்கழகத்தின் பேராசிரியர் மற்றும் துறைத் தலைவர் முனைவர் ஆர். வெங்கடராஜ் அவர்கள் நன்றியுரை வழங்கினார்.

## இந்திய பொருட்களுக்கான வரியை அமெரிக்கா 18% ஆக குறைத்ததன் பின்னணி என்ன? முழு விவரம்






புதுடெல்லி, பிப்.5- இந்திய பொருட்கள் மீதான வரி 50லிருந்து 18% ஆக குறைக்கப்படும் என்று அமெரிக்க அரசு அறிவித்து உள்ளது. இந்தியாவின் ராஜதந்திர நடவடிக்கைகளால் அமெரிக்க அரசு திடீரென வரியை குறைத்திருப்பதாக தகவல்கள் வெளியாகி உள்ளன.

கடந்த ஆகஸ்ட் மாதம் இந்திய பொருட்கள் மீது அமெரிக்க அரசு 50 சதவீத வரியை விதித்தது. ஆனால் மத்திய அரசு மிகுந்த நிதானத்தை கடைப்பிடித்தது. அதேநேரம் அமெரிக்க சந்தைக்கு மாற்றாக புதிய சந்தை வாய்ப்புகளை இந்தியா தேடியது.

இதன் விளைவாக ஐரோப்பிய நாடுகள், தென் அமெரிக்க நாடுகள், ஆப்பிரிக்க நாடுகள், மத்திய கிழக்கு நாடுகளுக்கு இந்திய பொருட்களின் ஏற்றுமதி கணிசமாக அதிகரித்தது. உள்நாட்டில் ஜிஎஸ்டி வரி குறைக்கப்பட்டது. இதனால் உள்நாட்டு வணிகம் கணிசமாக அதிகரித்தது.

கடந்த ஜூலையில் இந்தியா, பிரிட்டன் இடையே தடையற்ற வர்த்தக ஒப்பந்தம் கையெழுத்தானது. இதைத் தொடர்ந்து கடந்த டிசம்பரில் நியூசிலாந்து, ஓமன் நாடுகளுடன் தடையற்ற வர்த்தக ஒப்பந்தத்தை இந்தியா ஏற்படுத்தியது.

கடந்த ஜனவரி 27ம் தேதி 27 நாடுகள் அடங்கிய ஐரோப்பிய ஒன்றியத்துடன் தடையற்ற வர்த்தக ஒப்பந்தத்தில் இந்தியா கையெழுத்திட்டது. இது, அனைத்து ஒப்பந்தங்களின் தாய் என்று வர்ணிக்கப்பட்டது.

இந்தியா, ஐரோப்பிய ஒன்றியம் இடையிலான ஒப்பந்தம் அமெரிக்காவில் பெரும் அதிர்வலைகளை ஏற்படுத்தியது. கிரீன்லாந்து விவகாரத்தில் ஐரோப்பிய நாடுகள் மீது கூடுதல் வரி விதிப்பேன் என்று அதிபர் ட்ரம்ப் மிரட்டல் விடுத்து வந்தார். ஆனால் இந்தியாவுடன் ஐரோப்பிய ஒன்றியம் ஒப்பந்தம் மேற்கொண்ட உடன் தனது நிலைப்பாட்டை அதிபர் ட்ரம்ப் மாற்றினார்.

ஐரோப்பிய நாடுகளுடன் இணக்கமான அணுகுமுறையை கடைப்பிடித்தார். அதேநேரம் இந்தியாவுடன் வர்த்தக ஒப்பந்தத்தை இறுதி செய்ய அமெரிக்க அரசு தீவிரம் காட்டியது.

இந்த சூழலில் அமெரிக்க அதிபர் டொனால்டு ட்ரம்ப் தனது சமூக வலைதள பக்கத்தில் வெளியிட்ட பதிவில் கூறியதாவது: பிரதமர் நரேந்திர மோடியுடன் திங்கள் கிழமை தொலைபேசியில் பேசினேன். ரஷ்யா உக்ரைன் போர் உட்பட பல்வேறு விவகாரங்கள் குறித்து இருவரும் விவாதித்தோம். ரஷ்யாவிடம் இருந்து கச்சா எண்ணெய் வாங்குவதை நிறுத்திக் கொள்ள பிரதமர் மோடி சம்மதம் தெரிவித்தார்.

இனிமேல் அமெரிக்காவிடம் இருந்து அதிக கச்சா எண்ணெயை இந்தியா வாங்கும். வெனிசுலாவிடம் இருந்து இந்தியா கச்சா எண்ணெய் வாங்குவது குறித்தும் நாங்கள் ஆலோசித்தோம். இந்த நடவடிக்கைகள் உக்ரைன் போரை நிறுத்த உதவி செய்யும்.

500 பில்லியன் டாலர்: பிரதமர் நரேந்திர மோடியுடன் எனக்கு நட்புறவு நீடிக்கிறது. அவர் மீது மிகுந்த மரியாதை வைத்துள்ளேன். அமெரிக்கா, இந்தியா இடையே வர்த்தக ஒப்பந்தத்தை இறுதி செய்ய நாங்கள் ஒப்புக் கொண்டோம். இதன்படி இந்திய பொருட்களுக்கு அமெரிக்க அரசு இனிமேல் 18 சதவீத வரியை மட்டுமே விதிக்கும். அமெரிக்காவிடம் இருந்து 500 பில்லியன் டாலர் மதிப்பிலான எரிசக்தி, தொழில்நுட்பம், வேளாண் விளைபொருட்கள், நிலக்கரி மற்றும் இதர பொருட்களை வாங்க இந்தியா ஒப்புக்கொண்டிருக்கிறது. அமெரிக்கா, இந்தியா இடையிலான உறவு மேலும் வலுவடையும். இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

பிரதமர் மோடி நன்றி: பிரதமர் நரேந்திர மோடி சமூக வலைதளத்தில் வெளியிட்ட பதிவில் கூறியதாவது: அமெரிக்க அதிபர் ட்ரம்புடன் திங்கள்கிழமை தொலைபேசியில் பேசினேன். இந்திய பொருட்களுக்கு 18 சதவீத வரி விதிக்கப்படும் என்று அதிபர் ட்ரம்ப் அறிவித்துள்ளார். இதற்காக 140 கோடி இந்தியர்களின் சார்பில் அவருக்கு நன்றியை தெரிவித்து கொள்கிறேன்.

இரு பெரும் பொருளாதார நாடுகள், இரு பெரும் ஜனநாயக நாடுகள் ஒன்றிணைந்து செயல்பட்டால் இரு நாடுகளின் மக்கள் பலன் அடைவார்கள். உலகின் அமைதி, ஸ்திரத்தன்மை, செழிப்புக்கு அதிபர் ட்ரம்பின் சீரிய தலைமை அவசியமாகிறது.அவரது அமைதி முயற்சிகளுக்கு இந்தியா முழு ஆதரவு அளிக்கும். அவருடன் இணைந்து செயல்படுவேன். இவ்வாறு பிரதமர் நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.



## திருப்பூரில் உங்களுடன் ஸ்டாலின் திட்ட முகாம்கள் மூலம் நீண்ட நாள் தீர்க்க முடியாத மனுக்கள் தீர்வு : மு.பெ.சாமிநாதன் பெருமிதம்

திருப்பூர், பிப்.5- தமிழ்நாடு முதலமைச்சர் விழுப்புரம்மாவட்டம், திண்டிவனம் வட்டம், கொள்ளார் கிராமம், சிப்காட் வளாகத்திலிருந்துகாணொளிக் காட்சி வாயிலாக உங்களுடன் ஸ்டாலின் திட்டம் மற்றும் சமூகபாதுகாப்புத் திட்ட பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கி தொடங்கி வைத்ததைத் தொடர்ந்து, தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன் மற்றும் மனித வள மேலாண்மைத்துறை அமைச்சர் என்.கயல்விழி செல்வராஜ் ஆகியோர் மாவட்டஆட்சித்தலைவர், திருப்பூர்டாக்டர்.மனிஷ் நாரணவரே தலைமையில் திருப்பூர் தெற்கு சட்டமன்ற உறுப்பினர் க.செல்வராஜ், மேயர் ந.தினேஷ்குமார் ஆகியோர் முன்னிலையில் திருப்பூர் மாநகராட்சி, வித்யா கார்த்திக் திருமண மண்டபத்தில் திருப்பூர் மாவட்டத்தை சார்ந்த 5,955 பயனாளிகளுக்கு ரூ.32.24 கோடி மதிப்பீட்டில் பல்வேறு நலத்திட்ட உதவிகள்வழங்கினார்கள்.

அமைச்சர் திரு.மு.பெ. சாமிநாதன் அவர்கள் தெரிவித்ததாவது, தமிழ்நாடு முதலமைச்சர் தமிழக மக்கள் முன்னேற்றத்திற்காக பல்வேறு திட்டங்களை அறிவித்து சிறப்பாக செயல்படுத்தி வருகிறார்கள். தேர்தல் நேரத்தில் அறிவித்த வாக்குறுதிகள் அனைத்தும் நிறைவேற்ற வேண்டும் என்கிற எண்ணத்தின் அடிப்படையில் பல்வேறு திட்டங்களை வழங்கி வருகிறார்கள். அந்த வகையில் இன்றைய தினம் உங்களுடன் ஸ்டாலின் திட்டம் மற்றும் சமூக பாதுகாப்புத் திட்ட பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கி தொடங்கி வைத்துள்ளார்கள்.

தமிழ்நாடு முதலமைச்சர் பொறுப்பேற்றுக்கொண்டவுடன் மகளிருக்கு கட்டணமில்லா பேருந்து பயணத்திட்டம், மகளிர் சுயஉதவிக் குழுக்கள் கடன் தள்ளுபடி, நகைக்கடன் தள்ளுபடி, விவசாயிகளுக்கு மின்இணைப்பு வழங்குதல், பள்ளி சிறார் கண்ணொளி காப்போம் திட்டம், பள்ளிக்குழந்தைகள் பயன்பெறும் வகையில் முதலமைச்சரின் காலை உணவுத் திட்டம், புதுமைப்பெண் திட்டம், கலைஞர் மகளிர் உரிமைத் திட்டம், தமிழ்புதல்வன் திட்டம், உங்களுடன் ஸ்டாலின், நலம் காக்கும் ஸ்டாலின், தாயுமானவர் திட்டம், அன்புக்கரங்கள் உள்ளிட்ட எண்ணற்ற திட்டங்கள் அறிவித்து செயல்படுத்தி வருகிறார்கள்.

உங்களுடன் ஸ்டாலின் திட்ட முகாம்கள் மூலம் நீண்ட நாள் தீர்க்க முடியாத மனுக்கள் தீர்வு காணப்பட்டுள்ளது. இவ்வாறு மாண்புமிகு தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன் தெரிவித்தார்கள்.



■ திண்டுக்கல் மாவட்டம் கொடைக்கானல் தாலுகாவில் அமைந்துள்ள பூம்பாறை கிராமமானது, வரலாற்று சிறப்புமிக்க மிகப் பழமையான கிராமமாகும். இந்த கிராமத்திற்கு என்று மிக சிறப்பான வரலாறுகள் உண்டு. இந்த கிராமத்தில் அமைந்துள்ள மிக பழமையான அருள்மிகு குழந்தை வேலப்பர் திருக்கோவிலானது 1200 வருடங்களுக்கு மேல் பழமையானதாகும். இந்த கோவில் முருகனின் மூன்றாம் படை வீடான பழனி அருள்மிகு தண்டாயுதபாணி திருக்கோவிலின் கட்டுப்பாட்டில் உள்ளது. இந்த கோவிலில் வருடம் தோறும் தை மாதம் தேர் திருவிழாவானது, வெகு விமர்சையாக நடைபெறுவது வழக்கம். இந்த வருடத்தில் நடைபெறக்கூடிய திருவிழாவின் முதல் கட்ட நிகழ்வான கொடியேற்றமானது பொதுமக்கள் மற்றும் பக்தர்கள் புடை சூழ இன்று வெகு விமர்சையாக நடைபெற்றது தேர் திருவிழாவானது எதிர்வரும் வியாழக்கிழமை அன்று (12/02/2026) கோலாகலமாக நடைபெற உள்ளது.

## 2.5 கோடி பேரின் ஆதார் எண்கள் முடக்கம்: மோசடியை தடுக்க நடவடிக்கை

புதுடில்லி: பிப்.5- உலகளவில் மிகப்பெரிய பயோமெட்ரிக் அடையாள அமைப்பாக ஆதார் உள்ளது. நாடு முழுவதும் 134 கோடிபேரிடம் ஆதார் உள்ளது. வங்கிக்கணக்கு துவங்குவது முதல் பான் கார்டு பெறுவது வரையிலும், அரசின் நலத்திட்டங்களை பெறுவதற்கும் ஆதார் முக்கியமானதாக உள்ளது.

இந்நிலையில் ஆதார் பட்டியலின் துல்லியம் மற்றும் அதன் உண்மைத்தன்மையை உறுதி செய்வதற்காக நாடு முழுவதும் 2.5 கோடிக்கும் மேற்பட்டவர்களின் ஆதார் எண்கள் முடக்கப்பட்டு உள்ளதாக யுஐடிஏஐ தெரிவித்துள்ளது. இறந்தவர்களின் ஆதார் எண்கள் முடக்கப்பட்டு உள்ளதாக தெரிவித்துள்ள அந்த அமைப்பு, ஒருவர் இறந்தால் அவரின் ஆதார் எண்ணை முடக்குவது அவசியம். இதன் மூலம் மோசடி நடப்பதை தடுக்கவும், அந்த எண்ணை பயன்படுத்தி அரசின் நலத்திட்டங்களை தவறான முறையில் கிடைப்பதை தடுக்க முடியும் எனத் தெரிவித்துள்ளது.

## அதிமுகவுடன் கூட்டணியில் சேருவதற்கு தேமுதிக 14 இடங்கள் கேட்பதாக தகவல்



சென்னை, பிப்.5- தேமுதிகவை கூட்டணிக்குள் கொண்டு வர முயற்சிப்பதாக அதிமுக மாவட்ட செயலாளர்கள் கூட்டத்தில் எடப்பாடி பழனிசாமி பேசியதாகவும், கூட்டணியில் வருவதற்கு தேமுதிக 14 இடங்கள் கேட்பதாகவும் தகவல் வெளியாகியுள்ளது. கூட்டணி பற்றி தொடர்ந்து பேச்சுவார்த்தை நடைபெற்று வருவதாகவும் கூறப்படுகிறது. கூட்டணி கட்சியுடன் இணக்கமாக செயல்பட வேண்டும் என அதிமுக மாவட்ட செயலாளர்களுக்கு ஈபிஎஸ் அறிவுறுத்தியுள்ளார்

## ஈரோடு மாவட்டம் பெருந்துறை உட்கோட்ட காவல்துறை துணைக் கண்காணிப்பாளராக சிவக்குமார் பொறுப்பேற்பு



ஈரோடு, பிப்.5- ஈரோடு மாவட்டம் பெருந்துறை உட்கோட்ட புதிய காவல்துறை துணைக் கண்காணிப்பாளராக (டிஎஸ்பி) சிவக்குமார் அதிகாரப்பூர்வமாகப் பொறுப்பேற்றுக் கொண்டார்.

பெருந்துறை உட்கோட்ட அலுவலகத்தில் முறைப்படி கோப்புகளில் கையெழுத்திட்டுப் பொறுப்பேற்றுக் கொண்ட அவருக்கு, சக காவல்துறை அதிகாரிகள் மற்றும் காவலர்கள் நேரில் வாழ்த்துகளைத் தெரிவித்தனர். பொறுப்பேற்ற பின் பேசிய அவர், பெருந்துறை உட்கோட்டத்திற்கு உட்பட்ட பகுதிகளில் சட்டம் ஒழுங்கைப் பாதுகாக்கவும், குற்றச் செயல்களைத் தடுக்கவும் முன்னுரிமை அளிக்கப்படும் எனத் தெரிவித்தார்.

குறிப்பாகப் பொதுமக்களின் புகார்கள் மீது விரைந்து நடவடிக்கை எடுக்கவும், போக்குவரத்து நெரிசல் மற்றும் இதர சட்டம் ஒழுங்கு பிரச்சனைகளைச் சீர்செய்ய முழு ஒத்துழைப்பு வழங்கப்படும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

## ஈரோடு வருவாய் வட்டாட்சியர் முத்துகிருஷ்ணனுக்கு நேதாஜியின் சிறப்பு விருது




ஈரோடு, பிப்.5- சர்வதேச மனித உரிமைகள் மற்றும் சமூகநீதி சபை மற்றும் யுனெட் ஸ்டேட்ஸ் ஆப் இந்தியா பார்ட்டியின் தேசிய தலைவர் ஆர்.செல்வகணேசன் அவர்களின் ஆலோசனை மற்றும் மாநில தலைவர் ஆர் தன்ராஜ் அவர்களின் வழிகாட்டுதலுடன் மாவட்ட தலைவர் ஜெ கோபிநாதன், மாவட்ட செயலாளர் டாக்டர் நி தங்கவேல், மாவட்ட பொருளாளர் கு.கோபிநாத் அவர்களின் ஏற்பாட்டின் படி "ஈரோடு வருவாய் வட்டாட்சியர்" திரு.கோ.முத்துகிருஷ்ணன் அவர்களின் அவர் தம் பல்வேறு சேவைகளின் அடிப்படையில் கௌரவிக்கும் விதமாக "நேதாஜியின் சிறப்பு விருது" மாவட்ட செயலாளர் டாக்டர் நி தங்கவேல் அவர்களால் வழங்கி கௌரவிக்கப்பட்டது.

## எஸ்.வீரசாமி செட்டியார் பொறியியல் பாலிடெக்னிக் கல்லூரியில் சாலை பாதுகாப்பு விழிப்புணர்வு பேரணி




தென்காசி, பிப்.5- தென்காசி மாவட்டம் புளியங்குடிவீராசாமி செட்டியார் கல்வி குடும்பங்களின் தலைவர் டாக்டர் வி. முருகையா மற்றும் செயல் இயக்குனர் விக்னேஷ் வீராசாமி அவர்கள் அறிவுறுத்தலின் பேரில் எஸ் வீராசாமி செட்டியார் பொறியியல் கல்லூரி முதல்வர் டாக்டர் வி. மணிகண்டன் மற்றும் பாலிடெக்னிக் கல்லூரி முதல்வர் எம் இசக்கிமுத்து இவர்கள் முன்னிலையில் வீராசாமி செட்டியார் பொறியியல் மற்றும் பாலிடெக்னிக் கல்லூரியில் இருந்து ஒரு மாபெரும் சாலை பாதுகாப்பு விழிப்புணர்வு பேரணியை புளியங்குடி நகர் மன்ற தலைவர் விஜயா சௌந்தர பாண்டியன், எஸ் வீராசாமி செட்டியார் கல்விக் குழுமங்களின் தலைவர் டாக்டர் முருகையா புளியங்குடி நகர மன்ற ஆணையாளர் நாகராஜ் மற்றும் புளியங்குடி நகர மன்ற துணைத் தலைவர் அந்தோணிசாமி ஆகியோர் கொடியசைத்து பேரணியை துவக்கி விட்டனர்.

இதில் ஏராளமான மாணவ மாணவிகள் கலந்து கொண்டு சாலை பாதுகாப்பு விழிப்புணர்வு சம்பந்தமான துண்டு பிரசுரங்களை விநியோகித்து மற்றும் சாலை பாதுகாப்பு சம்பந்தமான விழிப்புணர்வை ஏற்படுத்தும் விதமாக பதாகைகள் உறுதிமொழி மற்றும் சாலை பாதுகாப்பு விதியை எவ்வாறு பயன்படுத்த வேண்டும் என்ற செய்முறை காட்சிகளை வீராசாமி செட்டியார் பொறியியல் மற்றும் பாலிடெக்னிக் கல்லூரி மாணவர்கள் செய்தனர் மேலும் இந்த பேரணி புளியங்குடி பேருந்து நிலையத்திலிருந்து பள்ளிவாசல் பேருந்து நிலையம் வரை பேரணி விழிப்புணர்வு வாசகங்களுடன் நடைபெற்றது இதற்கான ஏற்பாடுகளை வீராசாமி செட்டியார் கல்விக் குழுமங்களின் மேலாளர் தங்கப்பன் பிள்ளை பொறியியல் மற்றும் பாலிடெக்னிக் கல்லூரி பேராசிரியர்கள் ஆசிரியர்கள் அலுவலக பணியாளர்கள் ஏற்பாடுகளை செய்திருந்தனர்.

சக்கர வியூகம்
05.2.2026 வியாழக்கிழமை



■ தென்காசி மாவட்ட ஆட்சியரகக் கூட்டரங்கில் அனைத்து துறைகள் சார்ந்த திட்டப் பணிகளின் முன்னேற்றம் குறித்து மாவட்ட கண்காணிப்பு அலுவலர் / துணி நூல் இயக்குநர் இரா. லலிதா, இ.ஆ.ப., மாவட்ட ஆட்சித்தலைவர் ஏ.கே.கமல்கிஷோர், இ.ஆ.ப., ஆகியோர் தலைமையில் ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில், வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை சார்பில் இலவச வீட்டு மனைப் பட்டா, உதவித்தொகை (OAP) குறித்தும், ஊரக வளர்ச்சி துறையில் செயல்படுத்தப்படும் திட்டப் பணிகள் குறித்தும், மேலும் பல்வேறு துறைகளில் மேற்கொள்ளப்பட்டு வரும் வளர்ச்சித் திட்டப் பணிகள் குறித்தும் ஆய்வு மேற்கொண்டு அரசால் செயல்படுத்தப்படும் அனைத்து திட்ட பணிகளும் பொதுமக்களுக்கு சென்றடையும் வகையில் பணி மேற்கொள்ள வேண்டும் என மாவட்ட கண்காணிப்பு அலுவலர் / துணி நூல் இயக்குநர் இரா. லலிதா, இ.ஆ.ப., அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார்.இக்கூட்டத்தில், மாவட்ட வருவாய் அலுவலர் சீ.ஜெயச்சந்திரன், தென்காசி சார் ஆட்சியர் வைஷ்ணவிபால், இ.ஆ.ப., மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் மரு.இரா.தண்டபாணி, மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் மரு.சுப்புலெட்சுமி மற்றும் அனைத்துத்துறை அரசு உயர் அலுவலர்கள் பலர் கலந்துகொண்டனர்.

# இராதாபுரம் அதிமுக தகவல் தொழில்நுட்ப பிரிவு நிர்வாகிகள், வழக்கறிஞர்கள் ஆலோசனைக் கூட்டம்

இராதாபுரம், பிப்.5-

இராதாபுரம் அதிமுக தகவல் தொழில்நுட்ப பிரிவு நிர்வாகிகள், வழக்கறிஞர்கள் ஆலோசனைக் கூட்டம் கழக அமைப்பு செயலாளர் கி.ரி.சீனிவாசன் தலைமையில் நடைபெற்றது. இந்த நிகழ்ச்சியில் இராதாபுரம் மேற்கு ஒன்றிய கழக செயலாளர் அந்தோணி அமல ராஜா, வள்ளியூர் தெற்கு ஒன்றிய கழக செயலாளர் பால்துரை, இராதாபுரம் கிழக்கு ஒன்றிய செயலாளர் கே.பி.கே.செல்வராஜ், வள்ளியூர் வடக்கு ஒன்றிய கழக செயலாளர் லாசர், பணகுடி பேரூர் கழக



செயலாளர் லாரன்ஸ், வள்ளியூர் பேரூர் கழக செயலாளர் கருப்பசாமி ஆகியோர்கள் முன்னிலை வகித்தனர்.

மாவட்ட தகவல் தொழில் நுட்ப பிரிவு செயலாளர் அருண் குமார் வரவேற்றார். இந்நிகழ்ச்சியில் மாநில எம்ஜிஆர் மன்ற துணைச் செயலாளர் நாராயணப்பெருமாள், மாவட்ட கழக இணைச் செயலாளர் ஜாண்சிராணி, மாவட்ட வர்த்தக பிரிவு செயலாளர்பாரதிராஜா, மாவட்ட சிறுபான்மை பிரிவு செயலாளர் அருண் புனிதன், மாவட்ட அமைப்ப சாரா ஓட்டுநர் அணி செயலாளர் ராஜ் குமார்,

மாவட்ட அம்மா பேரவை இணைச் செயலா ளர்ராம்கு மார்துரைப்பாண்டியன், ஒன்றிய இளைஞரணி செயலாளர் ராதாபுரம் முருகேசன், மாவட்ட இளைஞரணி இணைச் செயலாளர் முத்துகுமார்,மாவட்ட இளைஞர் பாசறை பொருளாளர் பால் ரிச்சர்ட்,மாவட்ட எம்ஜிஆர் மன்ற துணை செயலாளர் ராமச்சந்திர பண்ணையார், மாவட்ட வழக்கறிஞர் அணி இணைச் செயலாளர் பிரதீஷ்குமார், மாவட்ட வழக்கறிஞர் பிரிவு துணைச் செயலாளர் கல்யாண்குமார்,வக்கீல் பணகுடி ராஜா,மாவட்ட வழக்கறிஞர் பிரிவு நிர்வாகி ஜேம்ஸ்,மாவட்ட தகவல் தொழில்நுட்ப பிரிவு இணைச் செயலாளர் முடவை ராஜா சுப்பிரமணியன், ஒன்றிய மாணவரணி செயலாளர் குமார் உள்ளிட்ட கட்சி நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.



# திசையன்விளை ஆரம்ப சுகாதார நிலையத்தை அரசு பொது மருத்துவமனையாக மாற்றக்கோரி ஆர்ப்பாட்டம்

திசையன்விளை, பிப்.5-

திசையன்விளை அரசு மேம்படுத்தப்பட்ட ஆரம்ப சுகாதார நிலையத்தை அரசு பொது மருத்துவமனையாக மாற்றக்கோரி ராதாபுரம் வடக்கு ஒன்றிய பா.ஜ.க. சார்பில் திசையன்விளை பழைய பேருந்து நிலையத்தில் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. நிகழ்ச்சிக்கு மாவட்ட தலைவர் எஸ் பி தமிழ்ச் செல்வன் தலைமை வகித்தார்கள். ஒன்றிய தலைவர் தினகரன் மற்றும் மாவட்டத் துணைத் தலைவர் ஜெகநாதன் முன்னிலையில் நிகழ்ச்சி நடைபெற்றது. மாவட்ட செயலாளர் உத்திரலிங்கம் , மகேந்திரன் , அந்தோணி ராஜன், சாந்தி ராகவன், சுவாமிநாதன், ஆறு செந்தில், கலைச்செல்வன், முத்தமிழ்செல்வி, சுவாமிநாதன், ராஜேஷ்குமார், நிஷாந்த், டிபி சரவணன், எஸ் சிவசுப்பிரமணியன், எஸ் மகேந்திரன், மீனவர் பிரிவு செயலாளர் ஜோன்ஸ் சதாசிவம், முருகானந்தம், ராஜேஷ்குமார், மகராஜன், ஜெகதீசன், ஜெகநாதன், கணேசன், பிரபு, ரங்கன், நாலாவது வார்டு கவுன்சிலர் லிபியா சக்திவேல், ஒன்றிய பொதுச்செயலாளர் ரங்கநாதன், ஒன்றிய செயலாளர் கோபி, ஒன்றிய செயலாளர் எஸ் கணேசமூர்த்தி, மணிகண்டன், குமாரி மாவட்ட அணி நிர்வாகிகள், கேந்திர பொறுப்பாளர்கள், கிளை கமிட்டி தலைவர்கள், மற்றும் பல நிர்வாகிகள் நிகழ்ச்சியில் கலந்து கொண்டார்கள்.

# கோவா சர்வதேச மாநாட்டில் எஸ்.வீ.சி பி.எட். கல்லூரி முதல்வருக்கு சிறந்த ஆராய்ச்சியாளருக்கான விருது

தென்காசி, பிப்.5-

தென்காசி மாவட்டம் புளியங்குடி தாய்லாந்து நாட்டை சேர்ந்த ஷினவாட்ரா பல்கலைகழகம், மதுரை காமராஜர் பல்கலைகழகம், நெல்லை மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைகழகம், தியகராஜர் கல்வியியல் கல்லூரி மற்றும் மித்ரதேவ் பப்ளிகேஷன்ஸ் இணைந்து நடத்திய சர்வதேச மாநாடு கோவா மாநில வி.எம். சல்கவோகர் சட்ட கல்லூரியில் "கல்வி யியல் மாற்றம்: சட்ட சீர்திருத்தங்கள் மற்றும் 21 ஆம் நூற்றாண்டின் உலகலாவிய பார்வைகள்" என்ற தலைப்பில் ஜனவரி 29 மற்றும் 30 தேதிகளில் நடைப்பெற்றது. 200 க்கும் மேற்பட்ட கல்வி





யியல் மற்றும் சட்ட துறை பேராசிரியர்கள், ஆராய்ச்சி மாணவர்கள், மற்றும் ஆராய்ச்சியாளர்கள் கலந்து கொண்டு தங்கள் ஆராய்ச்சி கட்டுரைகளை சமர்பித்தார்கள். அம்மாநாட்டில் எஸ். வீராசாமி செட்டியார் கல்வியியல் கல்லூரி முதல்வர் முனைவர். நா. சுப்பிரமணியன் கலந்து கொண்டு "மேல்நிலை பள்ளி ஆசிரியர்களின் தொழில்நுட்பத்தால் வரும் மன அழுத்தம்: வயது வாரியான பகுப்பாய்வு" என்ற தலைப்பில் ஆராய்ச்சி கட்டுரையை சமர்பித்தார்.

மேலும், அவருக்கு அங்கு சிறந்த ஆராய்ச்சியாளருக்கான விருது மாநாட்டு ஒருங்கிணைப்பாளர்களால் வழங்கப்பட்டது. சர்வதேச மாநாட்டில் கலந்து கொண்டு விருது பெற்றமைக்காக அவருக்கு எஸ். வீராசாமி செட்டியார் கல்வி குழுமங்களின் தலைவர் முனைவர். எஸ். வீ. முருகையா, மற்றும் நிர்வாக இயக்குநர் மு. விக்னேஷ் வீராசாமி அவர்கள் பாராட்டுகளை தெரிவித்தார்கள். விழாவில் எஸ். வி. சி. கல்வி குழுமங்களின் இயக்குநர் ராஜா, மேலாளர். தங்கப்பன் பிள்ளை மற்றும் கல்லூரி வளர்ச்சி இயக்குநர் ஜமால் முகமது ஜூபேர் கலந்து கொண்டு அவரை வாழ்த்தினார்கள்.



# மொடக்குறிச்சியில் நாட்டு நலப்பணித் திட்டம் சிறப்பு முகாம் துவக்க விழா

மொடக்குறிச்சி, பிப்.5-

மொடக்குறிச்சி சட்டமன்ற தொகுதி, கொடுமுடி வட்டம், கருமாண்டம்பாளையம் கொங்கு மஹால் திருமண மண்டபத்தில், அரச்சலூர் நவரசம் கலை மற்றும் அறிவியல் மகளிர் கல்லூரி மாணவிகள் பங்கேற்கும் நாட்டு நலப்பணித் திட்டம் (ழிஷிஷி) ஸ்ரீ சிறப்பு முகாம் துவக்க விழா சிறப்பாக நடைபெற்றது.

இந்த சிறப்பு முகாமினை மொடக்குறிச்சி சட்டமன்ற உறுப்பினர் டாக்டர் சி. சரஸ்வதி குத்து விளக்கு ஏற்றி துவக்கி வைத்து, நாட்டு நலப்பணித் திட்டத்தின் முக்கியத்துவம், சமூக பொறுப்பு, மாணவிகளின் பங்கு மற்றும் தேச வளர்ச்சியில் இளைஞர்களின் கடமை குறித்து மாணவிகள் மத்தியில் உற்சாகம் அளிக்கும் சிறப்பான விழாப் பேருரையாற்றினார்.

இந்த நாட்டு நலப்பணித் திட்ட சிறப்பு முகாம் 03.02.2026 முதல் 09.02.2026 வரை கருமாண்டம்பாளையம், சோளங்காபாளையம், கணபதிபாளையம், வட்டக்கல்வலசு மற்றும் கிளம்பாடி பேரூராட்சி ஆகிய பகுதிகளில் நடைபெறவுள்ளது. முகாமின் போது சுகாதாரம், சமூக விழிப்புணர்வு, சுற்றுச்சூழல் பாதுகாப்பு, தூய்மை பணிகள் உள்ளிட்ட பல்வேறு மக்கள் நல செயல்பாடுகள் மேற்கொள்ளப்பட உள்ளன.

இந்நிகழ்வில் பாரதிய ஜனதா கட்சியின் கொடுமுடி கிழக்கு ஒன்றிய தலைவர் திரு. அருண், கட்சியின் நிர்வாகிகள், அஇஅதிமுக கழக நிர்வாகிகள், கல்லூரி நிர்வாகத்தினர், முதல்வர், நாட்டு நலப்பணித் திட்ட அலுவலர்கள், பேராசிரியர்கள் மற்றும் ஏராளமான நாட்டு நலப்பணித் திட்ட மாணவிகள் கலந்து கொண்டு நிகழ்வை சிறப்பித்தனர்.



■ திண்டுக்கல் மாவட்டம், கொடைக்கானல் வட்டம், பூண்டி கிராமத்தில் அமைச்சர் ஐ. பெரியசாமியின் பிறந்தநாள் விழாவை ஒட்டி,கைப்பந்தாட்ட போட்டி நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டுள்ளன. அதை ஒட்டி கடந்த திங்கள்கிழமை நடந்த இறுதிப் போட்டிக்காக பள்ளிக்கு வந்த குழந்தைகள் அனைவரையும் இன்று விடுமுறை என்றும் வீட்டிற்கு செல்லுமாறு அனுப்பிவிட்டு, இறுதி போட்டி நடத்தியதாக பொதுமக்கள் சார்பாக குற்றசாட்டு வைக்கப்படுகிறது இதற்கு அதிகாரம் கொடுத்தது யார்? தலைமை ஆசிரியருக்கு விடுமுறை அளிக்க அதிகாரம் உண்டா? அதிகாரம் இல்லை என்றால், தலைமை ஆசிரியர் மீது நடவடிக்கை எடுக்கப்படுமா? என்ற பல கேள்விகள் பொதுமக்கள் சார்பாகவும், சமூக ஆர்வலர்களின் சார்பாகவும் கேள்வி எழுப்பப்படுகின்றது.





# ஈரோட்டில் பேரறிஞர் அண்ணா நினைவு நாள் அமைச்சர் சு.முத்துசாமி தலைமையில் மரியாதை

ஈரோடு, பிப்.5-

தமிழ்நாடு முன்னாள் முதலமைச்சர் பேரறிஞர் அண்ணா அவர்களின் நினைவு நாளையொட்டி, ஈரோடு வீரப்பன்சத்திரம் மண்டல அலுவலகம் அருகில் அமைந்துள்ள பேரறிஞர் அண்ணாவின் திருவுருவச் சிலைக்கு திமுக சார்பில் சிறப்பான முறையில் மரியாதை செலுத்தப்பட்டது.

தமிழக வீட்டு வசதி, நகர்ப்புற வளர்ச்சி மற்றும் மதுவிலக்கு ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் சு.முத்துசாமி தலைமை தாங்கி, அண்ணாவின் சிலைக்கு மாலை அணிவித்து மலர் தூவி மரியாதை செலுத்தினார். அதனைத் தொடர்ந்து, அங்கு கூடியிருந்த நூற்றுக்கணக்கான திமுகவினர் "அண்ணா வழியில் அயராது உழைப்போம்" என எழுச்சியுடன் முழக்கமிட்டு, அண்ணாவின் புகழுக்கும் அவரது அரும்பணிகளுக்கும் புகழஞ்சலி செலுத்தினர்.

இந்நிகழ்ச்சியில் ஈரோடு கிழக்கு சட்டமன்ற உறுப்பினர் வி.சி.சந்திரகுமார், வீரப்பன்சத்திரம் திமுக பகுதி செயலாளர் வி.சி.நடராஜன் உள்ளிட்ட முக்கிய நிர்வாகிகள் மற்றும் ஏராளமான கழகத் தொண்டர்கள் கலந்து கொண்டு அண்ணாவின் நினைவைப் போற்றும் வகையில் அஞ்சலி செலுத்தினர்.

இந்த நிகழ்வு அப்பகுதியில் பெரும் எழுச்சியை ஏற்படுத்தியது.





■ திண்டுக்கல் பிஎஸ்என்ஏ பொறியியல் கல்லூரியில், "என் ஊர் என் கனவு திட்டம் " தொலைநோக்கு திண்டுக்கல் 2030 மாவட்ட அளவிலான கருத்தரங்கு மாவட்ட ஆட்சித் தலைவர் சரவணன் தலைமையில், பழனி சட்டமன்ற உறுப்பினர் செந்தில்குமார் முன்னிலையில் நடைபெற்றது அருகில் மாவட்ட வருவாய் அலுவலர் ஜெயபாரதி, மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குனர் திலகவதி, தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம் திட்ட இயக்குனர் சதீஷ் பாபு, மாவட்ட ஆட்சியர் நேர்முக உதவியாளர் கீர்த்தனா மணி, துணை ஆட்சியர் ராஜேஸ்வரி கவி உட்பட பலர் உள்ளனர்.













SAKKRA VIYUGAM owned and published by PAL PANDIAN, printed at SHANLAX PRESS 66, VP COMPLEX, TPK MAIN ROAD, VASANTHA NAGAR, MADURAI-625003, Published at 70/53 A1, THILAGAR NAGAR 1ST STREET, ANUPPARPALAYAM, TIRUPPUR, TAMIL NADU-641652 Editor: PAL PANDIAN Phone : 88705 00000